**Dated : 17.12.2024**

**L.A.O.P. No. 54/2023**

**RW2. - திரு. அசோகன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் கோரிக்கையாளர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் M.A. வரை படித்துள்ளேன். எனக்கு சர்வே எண். 497 சம்மந்தப்பட்ட நிலங்களின் விவரங்கள் எனக்கு தெரியும். 06.10.1969 தேதியிட்ட பாகப்பிரிவினை படி முதல் கோரிக்கையாளர் அவர்களின் சகோதரர்கள் ராஜேந்திரன், சொக்கலிங்கம் மற்றும் சென்னம்மாள், கஜாகாசின்னப்பட்டிக்கு ஆகிய ஐவரும் பாகத்தின் மூலம் கிடைத்த சொத்துக்கள் என்றாலும் இல்லை. அந்த பாக பிரிவினை பத்திரத்தின் படி முதல் கோரிக்கையாளருக்கு 1 ஏக்கர் 15 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். இந்த விஸ்தீரணம் உள்ள நிலத்திற்கு சொல்லப்பட்ட நான்கு எல்லைகள் சரியாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 497ன் மொத்த விஸ்தீரணம் 2.68.5 எக்டேர் என்றால் சரிதான். 1984 – 1985 நில உடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சர்வே எண். 497/1, 497/2 ஆகியவைகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

நான் சொத்தை வாங்கும் போது, எனக்கு சொத்தை விற்றவரிடமிருந்து பத்திரம் மற்றும் பட்டா ஆகியவற்றை வாங்கி பரிசீலனை செய்த பின்னிட்டு தான் நான் கிரயம் பெற்றேன். நான் கிரயம் சென்னையன் என்பவரிடமிருந்து பெற்றேன். நான் கிரயம் பெறும் போது அந்த நிலத்தின் பட்டா எண். 1080 என்றும், அது சென்னையனின் அப்பா ப. வெங்கட்ராமசெட்டி என்பவரின் பெயரில் இருந்தது என்றால் சரிதான், 1990ல் அந்த நிலத்தின் விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் Ex.R5 ஆவணம் நான் கிரயம் பெற்றது என்றால் சரிதான். நான் வாங்கியது 1 ஏக்கர் 74 சென்ட் நிலமாகும். என்னிடம் காட்டப்படும் என்னுடைய கிரய ஆவணத்தில் நான் கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண். 497/2 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் சர்வே எண். 497/1 நிலத்தில் நான் கம்பிவேலி போட்டு அதை அனுபவித்து வருகிறேன், அந்த சர்வே நெம்பர் எனது கிரய பத்திரத்தில் காட்டப்படவில்லை. என்னுடைய கிரய பத்திரத்தில் சர்வே எண். 497/1 சொல்லாமல் விடுபட்ட விவரத்தை நான் எப்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் நில எடுப்பு செய்யும் போது 2002ம் ஆண்டு தெரிந்துக்கொண்டேன்.

என்னிடம் காட்டப்படும் கிரய பத்திரமான Ex.C1ல் சர்வே எண். 497/2 விஸ்தீரணம் எக்டேர் 0.70.0 என்று காட்டப்பட்டுள்ளது. அந்த விஸ்தீரண சொத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன். என் ஆவணத்தில் விடுபட்டதாக சொல்லப்படும் சர்வே எண். 497/1–க்குண்டான விஸ்தீரணம் என்ன என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு சரியாக சொல்ல முடியவில்லை. சர்வே எண். 497/1–ன் நான்கு எல்லைகள் எனக்கு தெரியும். வடக்கில் சென்னம்மாள் நிலம் இருந்து தற்போது T. அசோகன் த/பெ. திம்மிசெட்டி என்பவரின் நிலம் உள்ளது. தெற்கு பக்கம் என்னுடைய நிலமான 497/2 நிலம் உள்ளது. கிழக்கு புறத்தில் திம்மிசெட்டி மகன் அசோகன் நிலம் உள்ளது. மேற்கு பக்கம் கிருஷ்ணன் வகையறா நிலம் உள்ளது. எனக்கு விற்ற சென்னையன் என்பவருக்கு 07.01.1987 தேதியில் சென்னையனின் தகப்பனார் வெங்கட்ராமசெட்டி சென்னையனுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்த நிலமாகும்.

மேற்படி தானசெட்டிமெண்ட் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்தில் கிணறு, 1 ஏக்கர் 74 சென்ட் நிலமும், அதிலுள்ள கிணற்றில் எனக்கு பாதி பாத்தியமும், 5 HP மின்மோட்டார் பூராவும் பாத்தியப்பட்டது எனவும், மேலும் மேற்படி நிலத்தில் இளம் பலன் கொடுக்க கூடிய புளிய மரம் ஒன்றும், 5 புளியஞ்செடிகள் உள்ளது என்றும், 50 இளம் தென்னஞ்செடிகள் உள்ளது என்றும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தை தான் நான் கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் சரிதான், இந்த ஆவணத்திலும் 1 ஏக்கர் 74 சென்ட் நிலம் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் அந்த 1 ஏக்கர் 74 சென்டிற்கு அதிகமாக எனக்கு விற்பனை செய்திருக்க முடியாது என்றும், நான் எந்தவித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரிதான். சென்னையன் இந்த சொத்தை 17.04.1973ல் அவருடைய சகோதரரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரத்திலும் 1 ஏக்கர் 74 சென்ட் நிலம் மட்டும் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் Ex.C2ல் சர்வே எண். 497/1, 497/2 உட்பிரிவு செய்யப்பட்டு தனித்தனி விஸ்தீரணம் காட்டப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அந்த ஆவணத்தில் 497/2 வெங்கட்ராமசெட்டி என்று காட்டப்பட்டு பட்டா எண். 1080 – 0.76.0 எக்டேர் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த விவரம் எனக்கு முழுமையாக தெரியாது. மேற்படி இந்த ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தை தான் நான் கிரயம் பெற்றுள்ளேன். மேற்படி எனது ஆவணத்தில் சர்வே எண். 497/1 விடுபட்டது சம்மந்தமாக பிழை திருத்தம் செய்ய கோரி நடவடிக்கை ஏதும் எடுத்தேனா

என்றால் நில ஆர்ஜித நடவடிக்கை தொடங்கப்பட்டுவிட்டதால் என்னால் நடவடிக்கை எடுக்கப்பட முடியவில்லை. எனக்கு கிரயம் செய்த சென்னையனுக்கும், அவருக்கு தானம் கொடுத்த அவருடைய தகப்பனாருக்கும் 1 ஏக்கர் 74 சென்ட் நிலத்தை தவிர வேறு நிலங்கள் இல்லை என்பதால் தான் நான் பிழை திருத்த நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றால் சரியல்ல.

497/1 நிலமானது எனக்கு கிரயம் செய்த நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் என்னுடைய கிரய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள பம்புசெட், கிணறு, தென்னஞ்செடிகள் ஆகியவை உள்ளது, சர்வே எண். 497/1ல் உள்ளது. நான் கிரயம் பெற்ற 1 ஏக்கர் 74 சென்ட் நிலத்தில் தான் கிணறு, பம்புசெட், பலன் தரும் புளியஞ்செடிகள், தென்னஞ்செடிகள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 497/1ல் தான் மேற்படி பம்புசெட், கிணறு, மரங்கள் ஆகியவை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் என்னுடைய பத்திரம் தான் அதற்கு ஆதாரம். மேற்படி கிணறு, பம்புசெட், புளிய மரங்கள் ஆகியவை 497/1ல் உள்ளது என்பதை நிரூபிப்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமித்தேனா என்றால் இல்லை. ஆனால் அந்த நிலத்தில் உள்ள கிணறு, பம்புசெட், மரங்கள் ஆகியவற்றிற்கான பணத்தை நான் தான் பெற்றுக்கொண்டேன். எனக்கு கொடுத்த இழப்பீடு தொகை கொடுத்ததற்கான அவார்ட் காபி, மேற்படி பம்புசெட், கிணறு, மரங்கள் ஆகியைவ 497/1ல் உள்ளதாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது.

நான் இவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. 497/1C1ல் தான் நில எடுப்பு சம்மந்தமாக ஏற்பட்ட சர்ச்சை சம்மந்தமாக தான் இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் எனக்கு 720 சதுர மீட்டருக்குண்டான இழப்பீடு தொகையை எனக்கு வழங்க வேண்டும் என்று நில எடுப்பு அதிகாரியிடம் நான் கோரிக்கை மனு கொடுத்தேனா என்றால் 248 சதுர மீட்டருக்கு தான் எனக்கு பாத்தியப்பட்டதாகும், அதற்கு தான் நான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவை கொடுத்தேன். இது சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள எனது கோரிக்கை மனுவிலும், எனது வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் கொடுத்த மனுவை பரிசீலனை செய்ய கோரி மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிக்கை பெற்ற மாவட்ட வருவாய் ஆய்வாளர், சம்மந்தப்பட்ட நிலத்தை தணிக்கை செய்து, அறிக்கை தாக்கல் செய்ய தனி தாசில்தாரர் (நில எடுப்பு) திரு. சேகர் என்பவருக்கு உத்தரவிட்டிருந்தார் என்றால் சரிதான்.

அவர் இந்த நிலத்தை புலன் தணிக்கை செய்வது சம்மந்தமாக எனக்கும், 2வது கோரிக்கைதாரருக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதன் படி நாங்கள் இருவரும் அன்று ஆஜரானோம் என்றால் சரிதான். புலன் தணிக்கை செய்த போது அவர் என்னிடம் சர்வே எண். 497/1 எனக்கு நிலம் இருப்பது சம்மந்தமாக கோரிக்கை சம்மந்தமாக ஆவணங்கள் இருந்தால் ஒப்படைக்கும்படி என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். மேலும் அந்த சர்வே நெம்பரில் நான் தான் சுவாதீனத்தில் உள்ளேன் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை என்னிடம் கேட்டார். 497/1ல் எனக்கு நிலம் இருப்பது சம்மந்தமாகவும், அதில் நான் தான் சுவாதீனம் செய்துக்கொண்டிருக்கிறேன் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சர்வே நெம்பர் உள்ள நிலத்தை, நிலம் எடுப்பதற்கான இழப்பீடு தொகை எனக்கு தான் கொடுக்கப்பட்டது. சர்வே எண். 497/1C1ல் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்த 640 நிலத்திற்குண்டான இழப்பீடு தொகையை 1வது கோரிக்கைதாரருக்கு கொடுத்தது சம்மந்தமாக தான் நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேன்.

கிராம நிர்வாக அதிகாரியை மேற்படி அதிகாரி சேகர் விசாரணை செய்தார் என்றால் விசாரணை செய்ய வந்தார், பிரச்சனை என்று தெரிந்தவுடன் அவர் சென்றுவிட்டார். சேகர் ஆர்ஜித நிலத்தை புலத்தணிக்கை செய்து அது சம்மந்தமான அறிக்கையை மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பிவைத்தார் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் 1ம் கோரிக்கைதாரரர் கிருஷ்ணன் என்பவருக்கு இழப்பீடு வழங்கலாம் என்று பரிசீலித்து வழங்கியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியும். அந்த அறிக்கை சம்மந்தமாக எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது, அந்த அறிவிப்பு பெற்றுக்கொண்ட நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் என்னுடைய ஆட்சேபனையை தெரிவித்தேன். என்னுடைய ஆட்சேபனை பேரில் மாவட்ட வருவாய் அலுவலர், கன்னியப்பன் என்ற தனி தாசில்தாரை மீண்டும் புலத்தணிக்கை செய்து அறிக்கை அனுப்பிவைக்கும்படி அனுப்பிவைத்தார் என்றால் சரிதான்.

அந்த உத்தரவின்படி கன்னியப்பன் எங்களுக்கு முறையாக அறிவிப்பு அனுப்பிவிட்டு எங்கள் முன்னிலையில் தாவா சொத்து குறித்து மீண்டும் புலன் தணிக்கை செய்து அது சம்மந்தமாக அது பொருத்து ஒரு அறிக்கையை மாவட்ட வருவாய் அலுவலரிடம் அறிக்கை ஒப்படைத்துள்ளார். கன்னியப்பன் என்பவரும் 728 சதுரடிக்குண்டான நில எடுப்பு இழப்பீடு தொகையை 1ம் கோரிக்கை தாரருக்கு வழங்கலாம் என்று பரிந்துரை செய்த விவரம் எனக்கு தெரியும். அதை

நான் பின்னால் கேட்டு தெரிந்துக்கொண்டேன். 497/1B–க்குண்டான நில இழப்பீடு தொகை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு நான் தவறான தகவலை தந்து சர்வே எண். 497/1B–ல் நான் நில எடுப்பு இழப்பீடு தொகையை பெற்று அதை சாதகமாக்கி கொண்டு சர்வே எண். 497/1C1ல் இழப்பீடு தொகையை பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த தாவாவையும் நான் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆட்சேபனையின் அடிப்படையில் தான் இந்த கோரிக்கை மனுவை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த மனுவானது சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு படி தான் இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை இந்த மனுவில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

சர்வே எண். 497/1C1ல் எனக்கு எந்தவித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றாலும், நான் அதில் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. பாத்தியமும், உரிமையும் இல்லாத நிலத்தை பொருத்து நான் ஆட்சேபனை செய்து இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதால், 1ம் கோரிக்கைதாரருக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்டத்தையும், நஷ்டத்தை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, சர்வே எண். 497/1C1 நில எடுப்பு இழப்பீட்டு தொகையானது 1ம் கோரிக்கையாளரான வி.சி. கிருஷ்ணன் என்பவருக்கு மட்டும் தான் பாத்தியம் என்றும், எனக்கு பாத்தியம் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சர்வே எண். 497/1C2A தான் தேசிய நெடுஞ்சாலைக்காக நிலம் எடுக்கப்பட்ட சர்வே நெம்பர் என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் 720 சதுர மீட்டர் என்றால் சரிதான். அதன் சதுரடியானது 7747 என்றால் சரிதான். இந்த 17.76 சென்ட் நிலம் தான். மேற்படி நிலத்திற்கு இழப்பீடு தொகையாக ரூ.20,59,923/– நிர்ணயம் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தின் பட்டாவானது ஐந்து நபர்கள் பேரில் பட்டா

எண். 995ல் இருப்பதால் மேற்படி தொகையை நில எடுப்பு அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த நிலத்திற்கு நானும், 1ம் கோரிக்கைதாரர் தான் உரிமை கோரியதால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- XXX,
Principal District Judge,
Krishnagiri.